உ

கணபதிதுணை. அன்பளி

கும்பகோணம்

டவுன் ஹைஸ்கூலென்று வழங்குகிற

நாகரிக ஆங்கிலேய வித்தியாசாலைப்

புகழ்ச்சியாகிய

# மாணாக்கராற்றுப்படை.

இது

ஷை ஹைஸ்கூல்

முதல் தமிழ்ப்பண்டிதராகிய

பின்னத்தூர்

பிரஹ்மஸ்ரீ அ. நாராயணசாமிஐயரவர்களால்

இயற்றியது.

ஷை ஹைஸ்கூல்

இரண்டாவது தமிழ்ப்பண்டிதராகிய

அ. பாலசுப்பிரமணிய பிள்ளையால்

கும்பகோணம்

லார்ட் ரிப்பன் அச்சாபீசிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

இந்நூலுக்கு, மாணாக்காற்றுப்படை யென்னும் பெய ரெவ்வாற்றானமையுமோ வெனின் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலில் "தாவி னல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள் "கூத்தரும்பாணரும் பொருநரும் விறலியு, மாற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப், பெற்றபெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபயனெதிரச் சொன்னணபக்கமும்" என்பதன் வழித்தாய் அமையும். இதற்கு விதி மேற்கூறிய சூத்திரத்துள் அடங்குமோவெனின் அடங்கும்; என்னை "புலவராற்றுப்படை" "புத்தேளாற்றுப்படை" என்பவற்றிற்கு வேறிலக்கணம் இல்லாதிருந்தும், இதனையே ஆதாரமாகக்கொண்டு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலி னென்க.

மாணாக்காற்றுப்படையென்பதற்குக் கல்விபயிலக் கருதி அதற்கு வழிகாணாது வறுமையாலேக்கமுற்று வருந்திய மாணாக்கனொருவனைக் கல்வி பயின்று மேம்பட்டு அதனால் இராசாங்கத்தாராற் சிறப்புப் பட்டம் பெற்று அதிகாரமும் பெற்றானொருவன் ஆற்றுப்படுத்தியதாகப் பொருள் கூறுக.

இதன் அரும்பதவுரை பின்னர் வெளிப்படுத்தப்படும்.

உ

கணபதி துணை.

# சிறப்புப்பாயிரம்.

கும்பகோணம்

கவர்ன்மெண்டு காலேஜ்

தமிழ்ப்பண்டிதராகிய

## பிரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்

இயற்றியது.

எணைக்குஞ் சங்கத் தியனூற்சொல் லும்பொருளும்
பூணைக்கு மற்றும் பொருத்தியே—மாணைக்க
ராறுப் படையொன் றணியார் குடந்தையிடைச்
சாற்றிப் புகழ்படைத்தான் ருன்.

தொல்காப் பியமொன்றுந் தொல்காப் பியமூன்றும்
பல்காப் பியமும் பயின்றுணர்ந்தோ—னொல்காச்சீர்
காமமுறு பின்னைவரு நாரா யணசாமி
மாமறைவா ணன்சுகுண வான்.

உ

கடவுள் துணை.

கும்பகோணம்

* நாகரிக ஆங்கிலேய வித்தியாசாலைப்

புகழ்ச்சியாகிய

# மாணாக்கராற்றுப்படை.

## நேரிசை யாசிரியப்பா.

பூமிசை நிலைஇய பொருவி னான்முகப்
புத்தே டரூஉ மைத்திணை ஞாலத்து
வல்சியுங் கூறையு மொல்லுந வருளி
நூற்குங் கவல்கெடச் சீர்த்திக் கழகத்து
வேந்துமொழி பயிற்றுவித் தாய்ந்த வவையத்து
முந்துற நிறுவுநர்ப் பெறூஅ யந்தோ
வுன்ன னீயா வின்று நெஞ்சத்
தலமர றதர்ந்து புலம்புகொண் டியாழ
களிகூர் நிரப்பி னளியை யாகிப்
பழுதுகழி வாழ்க்கையிற் கெழுதகை யில்லா
வுள்ளங் கூம்ப வெள்ளென் பொளிறும்
பாங்கிரு விலாவிற் பைங்க ணிடுங்கி
மறிபுறத் தோணியி னொருவெரிங் கோடித்
தொகுநரம் புலறிய கூம்பற்றோள் சாம்பிக்
கட்கடை யுலங்குணப் பீளை காலாச்

* TOWN HIGH SCHOOL.

கெடலணங் குற்றுங் குடவரை வாசித்துச்
செவ்வரைத் தொய்த்தன தேய்செங் குடுமியொடு
நிலமா சறாஅ வரையடி நெரிவுங்
குறைவில் பெயர்ப் புரீஇ மொய்ப்பத்
தளர்நடைப் பட்டுத் தண்டா வறத்தினைப்
புரைதபப் பழியா விரைவற வருந்துயர்
பழுமர முதற்கிழ்ப் பாடற வசைஇ
விழுமமொடு கிடக்தோ யக்கை விருப்பி
னின்றொன்று கிளக்குவன் மாதோ கேட்பக்
கேட்டிசின் வாழி வறியோய் கேட்டிசின்
கண்கவர் செண்ணத் தொண்டும் பாண்டி
லொருநான் குருள்செறீஇ யோங்குநிலை யிரீஇக்
கதழ்வுட னிவளி தகைநூ யிர்ப்ப
வருநர்ப் போக்குநர் வங்க ணேவலர்
முன்னும் பின்னு முறைமுறை தொடரா
வரசுவிழை திருவி னொருபே ருகப்போ
டிறுமாந் தேகுவ லிந்நா டொன்று
னின்னினும் வறியே னாகிக் கொன்னே
கழிய விளமையுங் கையற் றவலத்
தழியப் பெயர்வழி யாற்றெதிர்ப் பட்டோ
னல்லுரை கொளீஇ நவைபிறக் கொருவுபு
வல்லாங்குச் சென்றுழி வந்தவில் வளனே
யவ்வழிச் சென்மதி சிறாஅ னமைவதோ
ரெவ்வமில் பாலா னியம்ப லான்றிசினோ
பூவரு தேனசைஇப் பொறிவரி யறுகா
லோவரு மென்சிறை யொலியினத் தும்பி
யீண்டுபு களியா வேண்டுவ துய்த்துக்

கவல்பற வளைஇக் கலாவிர் மிசைந்துங்
கல்லார் மனமெனக் கருள்படு பொதும்ப
ரீரிரு பாலுஞ் சூழ்புறச் சிவணி
நிழுத்த லொரீஇ விழுத்தகு சிறப்பி
னெழுகற லுவன்றிக் கெழுமு காவிரி
மரன்பல முரஞ்சிய வான்பெருங் கோட்டிப்
பொருதுபுன லலைக்குந் திருமலி யரிசி
லிருபே ரியாற்றி னெருசா ருற்றி
யரும்பிய வருட்கரும் பாயிரங் கொண்ட
கருப்பை யூர்திக் களிற்றிறை தனியும்
பாடல்சால் சிறப்பி னீடுகும் பேசன்
மோடுபடு நாஞ்சில்சூழ் கேடி னியமமு
மகனிலந் தாங்கிய வரவிறை தொழூஉ
நகைமுடி நாகேச் சுரனுந் தனியு
மெற்றுநீர் ஞாலத் திசையொருங்கு பரந்த
பெற்றுடைக்காரோணப்பெரியோன்கோட்டமு
மாவலி யுதவிய வாணன் றென்று
ளாவலிற் பழிச்சிய வண்ணல் கோட்டமு
முயங்கு மூழியு மூவா விறகை
வயங்கிய சீர்த்தி மாஅ னியமமும்
பாழியந் திண்டோட் படுசுடர் காது
மாழியந்தடக்கை யண்ணல் கோட்டமும்
வெள்ளியம் பொற்றை யள்ளிய மொய்ம்பிற்
கள்வன் கடும்பொடு மடியக் கடந்த
வுலவாச் சீர்சா லொருவ னிலயமும்
பொன்றிகழ் நோக்கத் தவுணற் புடைத்த
வன்றியம் பெயரிய மாயோன் குலமுந

திருகுசெயர் குன்றத் துருவிய வைவேற்
பெருமகிழ் செருப்பிற் பெரியோன் கோட்டமு
மரக்காற் கூத்தின் மருவலர்ச் செற்ற
வீரச் செல்வி வியன்பெருங் குலமுங்
காருகங் கடந்த சண்டிகை நியமமும்
பல்லாற் றூஉம் பண்ணுபு துதைஇ
நல்லா றோரா நவைசேர் சமயப
பிணக்கொருங் கொரீஇப் பேசிரு மூன்றி
னிணக்கி யருமறை யிருமுற் றோர்ந்து
நவிகடன் ஞாலத் தளியின் வலந்து
பொங்கிய விழாச்சீர்ச் சங்கரப் பெயர்கொடு
நெறியி னிலீஇ நீர்மை தழீஇய
வுலகவாசா னோங்கிய மடமு
மொழுக்கமில் சீர்த்திப் பல்பலர் மடங்களுங்
குணக்கோர் பிலங்கு கொடிநிலை குடப்பே
ரோலையிற் புனைஇய சீர்செறூ திங்கள்
வேட்டுவ னுளா னுட்டுபுகழ் நிறீஇ
யாடவினை தபுக்கு மலங்குநீ ரிலஞ்சியுந்
நிம்பா னரலை மேம்படு பாயசி
னறிதுயி லமர்ந்தோன் பெறமா மகனோத்
தன்பா லுயிர்த்த நன்பொற் பெயரிய
படிமைப் பார்ப்பான் குடிமைக் கோட்டது
பொலம்படு தாமரை பூத்த பொய்கையு
முலம்பொரு மொய்ம்பி னெஃகிற் றாழி யேந்து
வலங்கை மாஅல் வஞ்சியம் பெயரிய
நலஞ்செய் நன்மலர் நாறுநீ ரிலஞ்சியு
நல்லற னவிற்று நான்மறை தெரீஇத்

தொல்லோ னெயிலடு தூயோற் றொழூஉம்
பெருநா லந்தண் பெரியோர் தெருக்களு
மல்கு மனையரின் மாயோற் கன்பு
நியாவாழ்க்கை நிவந்தோர் தெருக்களும்
மன்னர் பின்னோ வளங்கெழு மறுகு
முட்டாச் சிறப்பிற் பட்டுநூல் கற்குந்
தட்டறு செல்வச் செட்டியர் மறுகும்
பசிய வெளிய பொற்கலம் பணிசெய்
நொசிவில் வாழ்க்கை நுண்வினைஞர் மறுகும்
பஃறொழி லியற்று மஃகலில் வாழ்க்கை
குன்றா வேளோர் குறைவி றெருக்களு
மேதி ரோனத்தினின் நீடுபஃ றாமோ
டோதரும் பல்பொரு ளொருங்குறத் தொகைஇ
யரசுநிறை பெட்கு மியாணர் நியமக்
கம்பலை கெழீஇய கயவா யிருக்கை
யும்பர் மேனிலை யோங்கிய மறுகும்
வயின்வயி னிலைஇய வான்பெருஞ் சிறப்பிற்
பயில்கல் லூரி பலவு மான்ற
வேத்தியல் வழாது நாத்திறப் புலவ
ருறழ்ந்த வுணர்ச்சியி னொருதிறம் படராப்
பல்வழக் கறுக்குந் தெற்றியம் பலமு
நன்பெரு ஞால மன்பதை மகிழ
வாய்நூல் யாக்கைக் குரியன வாய்ந்து
நோய்மருங் கொரீஇ மாமருந் துதவுபு
திறப்படப் புரக்கு மறப்புஞ் சாலையுங்
குய்யுந் துவையுங் கொழுஞ்சுவைக் கருனையு
நெய்யுந் துறைஇ நிரப்பற வல்சி

யறவோர்க் களிக்கு மறச்சா லைகளும்
புனைபடு மாண்பிற் பலவுந் தொகைஇப்
புக்கோ ருலகும் புரைகொள் சிவணி
முழுதுகாண் பழியாச செழுநீர்க் குடந்தைப்
பழமைபதி காப்ப ணமுந்துபட் டிரீஇக்
கன்னி யாரெயில் கிடந்து கவினிய
விற்றை நம்பி வியன்குலக் குறூஅ
தோங்கிய சிறப்பி னெல்லா கடிந்த
வாங்கிலோ வாசா னரும்பெய ரானுரீஇ
யொற்றமிழ் புலமைச் சொற்பயில சான்றோர்
றொக்குறை மன்றந் தெய்கென வாடாது
றோங்கர் ஞாயி லோங்கிய பதணஞ்
சூழ்வர நிலைஇத் துயவிடை மாமுர்
மினிர்பூண் கிடந்த மிடறெனக் கவினி
யமலுப்பு துணரிய கமுகுமோ ரற்றத்
றுநயினை நனித்துச சிறைநவில் காட்சியிற்
றநர்ந்துபல வுப்பா ணின்றோர் தன்மையின்
மாறுறப் பழுகிய சேணுயர் தெங்குந்
தேமலி ரிலஞ்சி திருமா வில்லமொடு
பைஞ்சுளை முட்புறத் திரள்காய்ப் பாகலுங்
கருஞ்சினைப் புன்னையு நறுந்தண் பாதிரி
செருவிளை யிதழி நிங்கனி நெல்லியொடு
செஞ்சுடர் வீயில மராஅஞ் சிவணிக்
காண்பின் வளாஇக் கவின்றலை துமிய
நோக்கங் கவர்கரு நொச்சி யகவயின்
மன்றல் சிதர்க்கெழு மௌவல் வெண்பூ
நாரத்தங் கமழு ணறும்பூஞ் சேட

றுனங் கமழ்வீ நளிகனை யிர
மேலை நந்தி யெழிறரு சண்பகந்
தளவஞ் செம்ம றநர்செவ் வந்தி
செறிந்து நறை கமழுந் தெண்பூம் பன்னியும்
பிறவுங் கெழீஇ முறையிற் சூழ்வுற
வேதி தேஎத்தி னீட்டிய பலப்பல
துறையி னிரீஇப் பொதுளுந் தோற்றத்த
நிடுழும் பானலும் பாடுற விரீஇ
யரசுறை கோயிலை யொருபரிசு நகூஉ
நன்ன ரமைந்த நகரினுக் குரித்தெனக்
கதலிகை நிரீஇய கடிசேர் கழகத்
தொருமுன் றடுக்கிய திருவிழை மேனிலை
வண்ணவாடியின் மண்ணமை போர்ப்புத
வெண்ணருங் குறைத்தென யாண்டு நிரீஇக்
காலதர்ச் செந்நிலை கம்பியி னிணக்கி
யாண்டாண் டமைவரக் காண்பி னட்டிப்
பல்வகை பயிலிடம் பாத்திடை தடைஇத்
துறைதுறை தோறு முறையிற் பிரியா
வெண்டளச் சுவரு கெண்டப நாற்பா
லேந்துநீள் பலகை யிலையயக் கண்டவ
றுப்ப றுய்கான் மென்மணை மீப்பெற
வீழுமுதலு மிநந்திடை நாளால்
வீறுசால் கம்மத்து மேவரக் குயிற்றி
நாழிகை நுணிக்கு நவைதீர் கருவிப்
பொறியிற் கோல்செரீஇ முறுகத் திரித்தலி
னிறையும் பிறழா முறையின் முட்கொடு
நுதியிற் காட்டு நுண்ணெழுத் தளவை

மையிர் குழலி மஞ்ஞெயுமிந் தென்று
வேயமை வசிந்தூரி மெலச்சொலிந் தனைய
நேர மெல்லூரி யாமெனுந் தகைய
பொன்னெழுத்துப் படுத்த புனைசேர் முடியின
வவிழ்ப்பட மூழிய நவைமி னன்னீர்
தோய்தர சிவணிய தூவெள் ளறுவை
பொற்ப மருங்கிற் பெட்ப வலித்தனர்
தாட்புறந் தருலா மேற்படக் கலைஇத்
தேழ்செய் யரணஞ் சூழ்தரு கழலினர்
வண்ணக் காழக வகைபல வாரியந்த
செண்ணத் தமைமெய்ப் பையொடு செறித்தனர்
பொழுதறி கருவி புனைந்த கிறத்தினர்
பாரியின் வலந்த வேரிய முடியினர்
வெயில்புறங் காக்குங் கவிகைக் கையினர்
பெரிய பயிற்றுந் சாத்தி யாசிரியர்
நன்மரபு தோன்றித் தொன்மை கடைக்கொளீஇ
யியலுட் பேணு மியற்கைநெறி பிறழா
ஒஞ்சலின் ஞாலந் தியனுடங் கோர்ந்தோர்
விடர்முடிப் பொற்றை வேலை ஞாலஞ்
சுடர்நறு வீயொடு தூங்கோ லனையர்
வேத்துநெறி மென்மொழி யாத்த நுவற்சியர்
வடாது தெறாது வண்மொழிப் பயிற்சியர்
நம்மோ ரன்ன ஞாலத் துயிரொன
வம்மாண்பு நிலைஇய வாற்றலிற் றடாஅக்
கட்டுரை வன்மை பெட்டாங் கினக்கும்
வாய்மை குன்று மேயோ ரவ்வழி
களித்தனர் வயின்றொறு நண்ணுவனர் புக்குச்

சால்பி னிரீஇய வற்றே தெய்ய
வாசிலே யாட்டை யகவையர் முதலாப்
பல்வகைச் சிறாஅ ரெல்லையின் மாட்சியர்
மடியொடு துயலா மாண்பமை திண்ணியர்
கட்பி லுள்ளத்துக் கறாஅ வியற்கையர்
பிணங்குதபு சால்பி னணந்தர்ப் பேரு
ருணங்கலில் கிளர்வின் வணங்கிய பண்பின
ருறைநா லோர்ப்பி னுயங்கார் கொளூஉ
மெய்யா வறிவின் மையாப் பில்லா
ரோசனிக் கெழீஇ யொள்ளிணாத் தாமரை
வீசெறிந் தல்கும் வியன்சிறை யோதிமங்
கருநரைக் குடைந்துசுட் டனைய காட்சியர்
பழிப்பி றொன்மை விழுக்குடிப் பிறந்தோர்
பால்வேறு பகுதியிற் பல்வகை தொகைஇப்
பிறங்குதரு மாபின் வருந்திரு வாளர்
பீடுகெழு சீர்த்தி நாடுபு கவற்சியிற்
புரைதீர் பல்கலை கற்பப் போந்தோர்
பூணுடை யாகத் தியாணர் வனப்பினர்
பெரிதுமகிழ் சிறப்பிற் பிரியா வுளத்தொடு
பேணிய வன்பிற் காணுபு மகிழ்ந்து
பைதல் சாலார் கொய்தமை கிடுகுடைப்
பொறிகற் பலகை செறிதீர் வெண்டாள்
போர்ப்புடைப் பன்னூல் யாப்பற ஞெமிரிப்
பௌவமொலி யவிந்தாங் கெவ்வமில் பாலாம்
கற்பா னெறியி னிற்பக் காண்புழித்
தமரோ ரன்ன வமரா நோக்கமோ
டமிழ்துபயின் றன்ன வஞ்சொ லளைஇ

யார்வ மிக்கொள வேர்புலந் திகவா
திறைவும் பேணி யிசைப்பன வுளநலித்
திதல் செய்ம்மார் காதலிற் றுணைவொரீஇ
யுகந்துமீட்டு வினவவு மகிழ்ந்துவெருள் வின்றி
யூற்றந் துதைஇக் கேட்டறி யளவையி [னா
னுண்மையி னுணர்க்குந் தொன்மைநக் குளவெ
வேறிய மங்கிய மாறுகொள லொரீஇ
யைய முதலன நொய்தின் கடைஇ
யொல்லுவ கலைநா கல்லென் சும்மையோ
டொட்டை யுளத்தின் கோட்டம் விதிர்ப்ப
வெளிய நிம்பிரி செவ்வனம் போக்கி
யங்கனில் சால்பொடு வெங்கிநூல் பயிற்றுப்
பாவை யென்ன வோவமின் றிரீஇ
மடியெழு துப்பிற் கடுசுவை யுணாஅப்
பருகுநா தன்மையி னருக விலரா
வழக்கிய திறப்பட நுவற்சியோ டோர்ந்து
சொற்றன வுள்ளிக் கற்றன மட்டும்
பல்காற் கெழீஇ யொல்கா விருக்கையிற்
கேட்டவட் போற்றினர் பாற்படப் பயின்று
கைப்பன கடாஅய்க் கடாவிடை மாற்றி
மற்று மற்று முட்டற வுசாஅய்
நீயார் மூசார் நேர்மையி னிலைத்தலி
னமைவரு பொருளுடங் கழியா காண்பின்
மறைவ வயலொன் றுப வழியி
னிறையிற் காண்பன நிச்சலு மெனவலங்
கறைதரு மெனைத்து மாய்ந்த முறையினின்
றீட்ட வேறு மியலும் பிரிப்பின்

யாண்ட மற்றென் றுதலு மின்னா
தொகைஇக் கூறு மிசையபு நாலு
மின்னுச்சுவை துழனி வெம்மை சுடர்தலென்
றின்ன பகுதிய வாகியப் பொருளினும்
வலித்த லகற்றன் மாற்றலென் றின்ன
கலித்த பான்மையிற் கண்பட டாகச
சுட்டிச் சொலூஉந் தோமி றாலு
மோங்கிய சிறப்பிற் றேளங் கதையோ
டரசிய னன்மொழி யருங்காப் பியமு
மோவவில் கைவினை யோவத் தியற்கையு
நிலனீ டியற்கை நெட்டிரு விசும்பிற்
பலவொண் பூஞ்சுடர் செயுநாள் கோளினப்
புடைபெயர்ப் புறழ்ச்சி புகனற் பனுவலு
மன்பதை கண்ணென வலபப மேம்படூஉ
நன்கன நிலைஇய நற்கணி நூலும்
பல்லா றெல்லாம் பகர்வட மொழியொடு
நல்லாறு துறைஇ நவிறமி ழியலுஞ்
சொல்வளங் கெழுமித் துவன்றக் கூற
வொல்வன பயின்று வல்லே யாயிடைப்
பொதிசேர் வல்சி புனையின் மிசைந்து
பூட்டைக் கூவனீர் வேட்டவா பருகிக்
கதிர்காய் நண்பகல் கழிப்பனர் துவர
முன்னர் வலந்தாங் குப்நெறி காண்மார்
பன்னுமொழி யின்சுவை பண்புளிக் கொளீஇ
யாயிடை யாங்காங் கன்புதகத் தழைஇத்
திரைகவுள் வெள்வாய் நரைமுது பார்ப்பான்
முக்கா லிடையமைத் தெக்கர் வெண்மணை

விருந்தையொடு கமழா விட்ட தூதையிற்
றெண்புனல் வாக்கிச் சிரகத் தேந்துபு
முறையி னுதவலி னவைநடபத் தேக்கிப்
பொழுதுகல் சேராப் போழ்தத்துப் பெற்றிற்
கழும முடித்த குடுமியர் விழுமிய
வரியார கச்சினர் பெரிதுமகிழ் சிறப்பப்
புனனுரை கடுக்கும் பொற்பம தெற்றுந்
துணைத லாறுத் தொழிலாட் டயர்ந்து
மல்லிய னெறிநனி செவ்வனம் பயின்று
வைகலு மிங்ஙன் வழாஅ மாண்பிற்
கல்வித் துறையின் கடைமுறை போகி
யவ்வவ் விற்றியாண் டெவ்வமில் கேள்விக்
குகப்பக் கூறி யிகந்த வொரீஇ
மேனுயர் கல்வியுஞ் சாலப் பயின்று
பறைந்தாங்கு விஞுவின பகர்ந்திறை நெறிசேர்
துறைப்பாற் புக்குத் துணைத்தக வொரீஇத்
துணைவி னளிபொரு டொகூஉ மகிழ்ச்சியின்
முன்னும் பின்னுந் துன்னுவ வளைஇ
மேதகப் பொலியும் விளக்கங் காணுப்
சென்மதி யின்னே சிறியோ யித்தையப்
பாய்தரு விருச்சியின் பயந்தேர் வாழி
நன்னர் நாளா னடநீ யாழ, அதுவே
தொடுகட லாடைத் துவரை யாண்டோன்
வண்ணப் பெயரிய வண்ண றலைவனு
வெண்ணருஞ் சிறப்பினத் தொன்னகர் நிலைஇய
முரஞ்சிய வறிவின ரரம்பில் பண்பினர்
பல்லோர் குழீஇத் தொல்லிய னெறிப்படக்

காப்பில் காண்பிற் புரக்கு மாண்பமை
தாவயிற் றுனைதன் மேவரச் செலீஇ
முன்னிய கவற்சி முகத்திற் காண்வரப்
பன்னல் பலவொரீஇப் பண்புளிப் போற்றி, அவர்பாற்
போந்தது வலந்துழி யெய்ந்த தோர்ந்து
நின்னையு மந்நெறிக் கட்டி நினக்குறு
தெருமரல் கடைஇச் செஞ்சோற்று வல்சி
யரிறபத் தருமா றமைத்துறுவை தரீஇ
யடிபுதை யரண மாகத் தெழிற்பை
குடைபல நாலோ டடைவி னுதவ
வவ்வழி நிலைஇக் கவ்வை கடிந்து
பெட்பிற் பேணிய பெட்டாங் குற்றுக்
கழுமிய வுவகையிற் கண்கூ டாக
மதைஇய நோக்கத்து வளம்பெறு திற்றி
பவ்வழி யெனையகத் துள்ளுவை கொல்லோ
வெவ்வழிக் கொளீஇ மிகைநீர் நெஞ்சத்
துய்வழி யுள்ளினு முள்ளா தொருவினுங்
கவ்வை யுள்ளக் கவல்பறச் செய்ம்மார்
செவ்வனுணா வலந்த திவ்வயிற் சிறூஅ
னுமரோ நீயே நுன்மர புளமோ
யயமரிய யார்க்கு மன்புதக நிலைஇ
வாழிய வைகுதல் வாய்வ
தாழிசூழ் வையத் தரும்புகழ் நிலைத்தே.

மாணுக்கராற்றுப்படை முற்றிற்று.